சார்பு நீதிமன்றம், அவிநாசி

M.C.O.P. No.14/2017

2021 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | மகேஸ்வரி | வயது | 45 |
| க.பெ. | உலகநாதன் | தொழில் | |
| முகவரி. | அருனூத்திமங்கலம், இராமநாதபுரம் மாவட்டம் | | |

வா.சா.1 முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு 1 வது சாட்சியாக பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் உண்மை. அதில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1, மாதிரி வரைபடம் நகல் ம.சா.ஆ.2, பார்வை மகஜர் நகல் ம.சா.ஆ.3, விபத்துக்கு காரணமான Hero Honda Passion Pro இருசக்கர வாகனத்தின் பதிவு எண். TN65 T7923 -ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.4, விபத்தில் இறந்து போன நீலமேகம் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.சா.ஆ.5, விபத்தில் இறந்துபோன நீலமேகம் இறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.6, விபத்தில் இறந்துபோன நீலமேகம் வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.7, எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.8, எனது வங்கி கணக்கு புத்தகம் நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.9, விபத்தில் இறந்துபோன நீலமேகத்தின் பெயரில் உள்ள விவசாய பூமிக்கான சிட்டா சான்றிட்ட நகல் ம.சா.ஆ.10, மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரிதான். என் தந்தை சைக்கிள் ஓட்டிச் சென்றபோது பின்னாலில் இருந்து இருசக்கர வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னார்கள். அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 2 ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனத்திற்கு எந்த நஷ்ட ஈடும் கொடுக்க வேண்டிய கடப்பாடு இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை விவசாய கூலி வேலை பார்த்து வந்தார். என் தந்தை வேலை பார்த்த வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த போது என்

Sd/-மகேஸ்வரி

தந்தைக்கு 72 வயதிருக்கும். என் தந்தை அந்தநேரத்தில் எந்த வேலைக்கும் செல்லவில்லை அவருக்கு எந்த வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. என் தந்தைக்கு விவசாய நிலம் உள்ளது அதை என் தாயார் பார்த்து வருகிறார். அதனால் மனுதாரருக்கு எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் பல தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான், என் தாய் மற்றும் என் அக்கா அனைவரும் இராமநாதபுரம் மாவட்டம் என்றால் சரிதான். விபத்திற்கு முன்பிருந்து அங்குதான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான்.

Sd/-மகேஸ்வரி

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the pleader and admitted by the witness to be correct.*

*Sd/-K.Suresh Kumar, B.A., B.L.,*
*Sub Judge, Avinashi.*